# மேயர் பதவியிலிருந்து இறக்க முயற்சிகள் நடந்தன

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஆனி: 21 றஜப்: 28 இதழ்: 143

யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-7-78

## சிவனு தொடர்ந்து சாட்சியம்

(கொழும்பு)

"முதலாவது எதிரி கலாபதியைப்பற்றி எவரும் எனக்கு ஒன்றும் சொல்லித்தரவில்லை. பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டைத் தொடர்ந்து மூன்றுபேர் என்னை நோக்கி ஓடிவந்தனர். அவர்களின் கைகளில் துப்பாக்கி, சத்தி என்று ஆயுதங்கள் இருந்தன. அங்கு என்னைநோக்கி வந்த மூவரில் இருவர் மட்டுமே இங்கு உள்ளனர். மூன்றாவது ஆளை இங்கு காணவில்லை."

இவ்வாறு யாழ். மேயர் துரையப்பா கொலைவழக்கு விசாரணை நேற்று இரண்டாவது நாளாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ஜே. எப். ஏ. ஸோசா முன்னிலையில் நடைபெற்றபோது துரையப்பாவின் கார்ச்சாரதி சிவனு சாட்சியமளிக்கையில் கூறினார்.

கார்ச்சாரதி சிவனுவை நேற்று எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகளான திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், பி. எச். செருபிம், வி. என். நவரத்தினம் ஆகியோர் குறுக்கு விசாரணை செய்தனர்.

### பதவியிலிருந்து இறக்க...

சட்டத்தரணி எம்.சிவசிதம்பரம்: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டிருந்தது பற்றி, கொலை நிகழ்ந்தபோது உமக்குத் தெரியுமா?

சாட்சி: எனக்குத் தெரியாது.

சட்: மேயர் பதவியிலிருந்து திரு. துரையப்பாவை இறக்க சிலர் முயற்சி செய்தனர் என்பது உமக்குத்தெரியுமா?

சாட்சி: ஆம்.

சட்: இது பற்றி மேயர் வீட்டில் எதுவும் பேசப்பட்டதா?

சாட்சி: பேசப்பட்டிருக்கலாம்.

சட்: ராஜசுந்தரத்துக்குச் சொந்தமான 'வானி'ல்தான் துரையப்பா கொண்டுசெல்லப்பட்டார்?

சாட்சி: ஆம்.

சட்: சூரியரின் கையாள் தான் ராஜசுந்தரம்?

சாட்சி: தெரியாது.

சட்: முத்திரை மந்திரியை உமக்குத் தெரியுமா?

சாட்சி: தெரியும்.

சட்: கொலை நிகழ்ந்த பின்னர் பொலிசார் எதுவும் உம்மிடம் கேட்டனரா?

சாட்சி: பொலிஸார் என்னிடம் எதுவும் கேட்கவில்லை.

சட்: சம்பவம் நடைபெற்ற தன்பின்னர் நீர், பொன்னாலை கோயிலுக்குப் போனீரா?

சாட்சி: நான்கு தடவைகள் போனேன்.

எந்தெந்தச் சந்தர்ப்பங்களில்?

சாட்சி: முதலில், திருமதி துரையப்பாவுடனும் எஸ். பி. சுந்தரலிங்கத்துடனும் போனேன். அப்பொழுது பொலிசார் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. இதன் பின்னர் சங்கானைப் பொலிசிற்குச் சென்றுவிட்டு கோயிலுக்குப் போனேன். அப்போதும் பொலிசார் ஒன்றும் கேட்கவில்லை.

சட்: துரையப்பாவை வானில் எடுத்துச்சென்ற

(6-ம் பக்கம் பார்க்க)

# சூடு விழுந்ததும் என்னுடன் கலாபதி முட்டுப்பட்டார்

## யோகநாதன் சாட்சியம்

[கொழும்பு]

"பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில் முன்பாக நாங்கள் சென்ற கார் நின்றதும், துரையப்பாவும், ராஜரத்தினமும் இடதுபக்கமாக இறங்கினர். நானும் இடதுபக்கமாக இறங்கினேன். அப்போது துப்பாக்கிச்சூட்டுச்சத்தம் கேட்டது. காரின் முன்பாக ஓடிவந்த ஒருவர், என்னுடன் முட்டுப்பட்டு ஓடினர். அவரின் கையில் ஒரு பொருள் இருந்தது. என்னுடன் முட்டிக்கொண்டு ஓடியவர் முதல் எதிரி கலாபதிதான்."

இவ்வாறு முன்னாள் யாழ். மேயர் துரையப்பா கொலைவழக்கு விசாரணையில் மாரிமுத்து யோகநாதன் நேற்று சாட்சியமளிக்கையில் கூறினார். துரையப்பா கொலைவழக்கு விசாரணை கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஜே. எப். ஏ. ஸோசா முன்னிலையில் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது. சாட்சியை எதிரிகள் தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எம்.சிவசிதம்பரமும் அரசாங்க பிரதம வழக்குத் தொடுநர் திரு. கென்னத் செனவிரத்னவும் குறுக்குவிசாரணை செய்தனர்.

திரு. மா. யோகநாதன் (38 வயது) தமது சாட்சியத்தில்மேலும் தெரிவித்ததாவது:

### சம்பவம் நடந்தபோது..

"சம்பவம் நடந்த 1975-ம் ஆண்டு ஜூலை மாதம் 27ம் திகதி நான் கொட்டடியிலுள்ள ப. நோ. கூ. சங்கத்தில் ஒரு இயக்குநராக இருந்தேன்.

"ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலுச்குச் செல்வதை மேயர்துரையப்பா ஒருவழக்கமாகக்கொண்டிருந்தார். அவருடன் நானும் போவது வழக்கம். சம்பவம் நடைபெற்ற தினமும் நானும் அவருடன் போனேன். நாங்கள் சென்ற காரின் சாரதியின் பெயர் சிவனு. எங்களுடன் ராஜரத்தினமும் வந்தார். துரையப்பா முன்சீட்டில் இருந்தார். எனக்கு இடதுபக்கத்தில் ராஜரத்தினம் இருந்தார். நான், சாரதிக்குப் பின்புறமாக இருந்தேன்.

### துரையப்பா இறங்கியதும்

"கார் நிறுத்தப்பட்டதும், துரையப்பா இறங்கினர்.அதே இடதுபக்கமாக ராஜரத்தினமும் இறங்கினர்- நானும் இறங்கினேன்,அப்போது துப்பாக்கிச்சூட்டுச்சத்தம் கேட்டது

"காரின் முன்புறமாக ஓடிவந்த ஒருவர், என்னுடன்முட்டுப்பட்டு ஓடினர்- அவரின் கையில் ஒருபொருள் இருந்தது அதன் நீளம் என்ன என்று தெரியவில்லை

"நான் பயத்தினல் அங்கிருந்த ஒரு கடைக்குள் ஓடினேன். காரின் இடது பக்கத்தால் இறங்கி வலது பக்கத்தால் ஓடினேன்."

### அடையாளம் காட்டினர்

இக்கட்டத்தில் அரசாங்க பிரதம வழக்குத் தொடுநர் திரு. கெனத் செனவிரத்ன சாட்சியைப் பார்த்து: "மல்லாகத்தில் நீர் எவரையும் அடையாளம் காட்டினீரா?" என்று கேட்டபோது சாட்சி "ஆம்" என்று பதிலளித்தார்.

## துரையப்பா கொலை வழக்கு விசாரணை

வழக்குத்தொடுநர்: இப்போது அடையாளம் காட்ட முடியுமா?

சாட்சி: "ஆம்"

இப்படிக்கூறி முதலாவது எதிரி கலாபதியை சுட்டிக் காட்டினர்

சாட்சி; சம்பவம் நடைபெற்றபோது கலாபதியை நான் கண்டேன் காரின் முன்யாக வந்து என்னுடன் முட்டிக்கொண்டு ஓடியவர் கலாபதிதான்

சாட்சிமேலும் கூறுகையில், 'பயத்துடன் ஓடி, கடைக்குள் நான் சென்றதும் சிவனு வந்தார்-சில நிமிடங்களில் வெளியில் வந்து பார்த்தபோது காரைக் காணவில்லை- துரையப்பா இரத்த வெள்ளத்தில் வீழ்ந்துகிடந்தார்" என்றார்

சாட்சி இன்று தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுவார் (ப)

## தமிழக அமைச்சர் -- 'அமிர் இரண்டுமணி நேரம் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தமிழக அமைச்சர் ஜனப் ராஜா முஹம்மது,நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ. அமிர்தலிங்கத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்து, சுமார் இரண்டுமணி நேரம்வரை உரையாடினர்.

இலங்கைத்தமிழரின் நலன் பற்றி மிகவும் கவனத்தோடு கேட்டறிந்த அமைச்சர், கடந்த வருடம் நாட்டில் இடம்பெற்ற கலவரம் பற்றியும்விரிவாகத் தெரிந்துகொண்டார்.

தமிழக ஆட்சிபற்றி ஜனப் ராஜா முஹம்மது விளக்குகையில்,தி.மு.கழகத்திலும்பார்க்க மிகவும் பொறுப்புணர்வுடன் தமிழ்நாட்டை அ. இ.அ.தி. மு. கழகம் ஆட்சிபுரிந்து வருகிறது என்றும் இலங்கைத் தமிழர்பால் எமக்கும்நிறைந்தஅக்கறை உண்டு என்றும் கூறினர்.

'யாழ்ப்பாணத்துக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் அளவளாவ மிகவும் விரும்புகிறேன். விரைவில் யாழ்ப்பாணத்துக்கு வருவேன்' என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

'இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னைகள், அவர்களை எதிர்நோக்கியுள்ள கஷ்டங்கள் பற்றி அமைச்சர் ராஜா முஹம்மதுவுக்கு விரிவாக எடுத்துக்கூறிய எதிர்க்கட்சித் தலைவர் திரு.அமிர்தலிங்கம், 'தமிழ் ஈழம்தான் எங்களின் ஒரே முடிவான இலட்சியம்' என்று விளக்கினர். (ம)

## துண்டுப்பிரசுரம் விநியோகித்தவர் கைது

(கொழும்பு)

அரசுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த குற்றத்திற்காக திரு. வில்பிரட் பெரேரா என்பவர் நேற்றுப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

மாஜிஸ்திரேட் முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது, இம்மாதம் 7ந்திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். [ம]

## 240 சிங்களப் பாடசாலைகள் தமிழ் கற்பிக்கப்படுகிறது

(கொழும்பு)

பாடசாலைகளில் சிங்களமும் தமிழும் கற்பிக்கும் அரசின் இருமொழித் திட்டம் பெரு வெற்றி அளித்துள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

240 சிங்களப் பாடசாலைகளில் தமிழும், 140 தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களமும் கற்பிக்கப்பட்டுவருகிறது என்றும் மட்டக்களப்பு, கல்முனை, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளிலேயே சிங்களம் கற்பிக்கப்பட்டு வருகிறது என்றும் கல்வி அமைச்சு

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

மின்சாரம், தண்ணீர் விநியோகம் உட்பட சகல நவீன வசதிகளும் கொண்ட விசால மானவீடு ஒன்று யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அல்லது அதற்குச் சமீபமாக கொழும்பிலுள்ள தனியார் அபிவிருத்தி நிறுவனமொன்றின் கிளை அலுவலகத்திற்குத் தேவை. மாதவாடகை, முற்பணம் ஆகிய சகல விபரங்களையும் அறிவித்து தபால் பெட்டி எண் 16, தெகிவளை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 9696

நல்ல சமையல்காரனும், விற்பனையாளரும் உடன் தேவை. ஆ. க. தனகசபாபதி அன் சன்ஸ், 54, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 9742

கிளாஸில் வர்ணவேலை செய்யக் கூடிய (பெயின்டிங்) அநுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. பழகுபவர்களும் எடுக்கப்படும். தகுதிக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். நேரில் 15-ந் திகதிக்குமுன் தொடர்பு கொள்ளவும். எஸ். ஆர். கே. கிளாஸ் பிறிண்டிங் வேர்க்ஸ், மைலன்ஸ் பில்டிங், 119/3, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 9741

### விற்பனைக்கு

சாவகச்சேரி பருத்தித்துறை றோட்டில் சாவகச்சேரி கெருடாவில் கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. சி. சிவ சுப்பிரமணியம் கெருடாவில். 9668

### விற்பனைக்கு

மகோக்கனி (மலைவேம்பு) பலகைகள் விற்பனைக்குண்டு. அளவுகள்; 4'' கனதி-1½ அடி அகலம், 8 அடி நீளம். 1'' கனதி, 1 அடி அகலம், 8 அடி நீளம். வாங்கக் கூடியவிலை விபரத்துடன் விண்ணப்பிக்கவும். கூடுதல் விலை கேட்பவர்களுக்கு விற்கப்படும். விளம்பர இல: 9736 Co, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 9736

யாழ். றோட்டரி - பரி. யோவான்

# பொருட்காட்சியில்

## பரிசுபெற்ற பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். றோட்டரிக் கழகம் பரியோவான் கல்லூரியுடன் இணைந்து பரி. யோவான் கல்லூரியில் நடத்திய விஞ்ஞான சித்திர, கைப்பணிப்பொருட் காட்சியில் வெற்றிபெற்ற பாடசாலைகளுக்குக் கடந்த 27ம் திகதி கல்லூரி மண்டபத்தில் வைத்துப் பரிசுகள் வழங்கப்பட்டன. வெகுவிமரிசையாக நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பிரதமவிருந்தினராகக்கலந்துகொண்டார். திருமதி வித்தியானந்தன் பரிசுகளை வழங்கினார்.

இப்பொருட்காட்சி கடந்த 22ம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெற்றது. வடமாநில வித்தியாதிபதி திரு. மாணிக்கவாசகர் பொருட்காட்சியை திறந்துவைத்தார்.

பொருட்காட்சியில் பரிசு பெற்ற பாடசாலைகள் விபரம் வருமாறு;

விஞ்ஞானம் மேற்பிரிவு: இரசாயனம்: முதலாம் பரிசு- யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, இரண்டாம் பரிசு: யாழ். பரி யோவான்கல்லூரி, மூன்றும் பரிசு: யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

பௌதிகம்: முதலாம்பிரிவு: திருக்குடும்ப கன்னியர் மடம் கொன்வென்ற், இரண்டாம் பரிசு: யாழ். இந்துக்கல்லூரி, மூன்றும் பரிசு: யாழ். பரி யோவான் கல்லூரி.

உயிரியல்: முதலாம் பரிசு- பரி யோவான் கல்லூரி, இரண்டாம் பரிசு: பரி யோவான்கல்லூரி, மூன்றும் பரிசு-வேம்படி மகளிர் கல்லூரி.

விஞ்ஞானம் மத்திய பிரிவு: முதலாம் பரிசு- கொக்குவில் இந்துக்கல்லூரி, இரண்டாம் பரிசு: கொக்குவில் இந்துக்கல்லூரி, மூன்றும் பரிசு- பரி. யோவான் கல்லூரி.

விஞ்ஞானம் கீழ்ப்பிரிவு: முதலாம் பரிசு- பரி யோவான் கல்லூரி, இரண்டாம் பரிசு- கொக்குவில் இந்துக்கல்லூரி, மூன்றும் பரிசு- பரி யோவான் கல்லூரி.

சித்திரம்: மத்தியபிரிவு: முதலாம் பரிசு- யாழ்ப்பாணக் கல்லூரி, இரண்டாம் பரிசு: யாழ். இந்துமகளிர் கல்லூரி, மூன்றும் பரிசு- வேம்படி மகளிர் கல்லூரி.

சித்திரம்: கீழ்ப்பிரிவு: முதலாம் பரிசு: யாழ். மத்திய கல்லூரி, இரண்டாம்பரிசு-யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயம், மூன்றும் பரிசு: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

கைப்பணி கீழ்ப்பிரிவு: முதலாம் பரிசு: யூனியன்கல்லூரி, தெல்லிப்பழை, இரண்டாம் பரிசு: பரி யோவான் கல்லூரி, மூன்றும் பரிசு: வேம்படி மகளிர் கல்லூரி.

கைப்பணி: மத்திய பிரிவு: முதலாம் பரிசு- யாழ்ப்பாணக் கல்லூரி, இரண்டாம் பரிசு- திருக்குடும்ப கன்னியர் மடம் கொன்வென்ற், மூன்றும் பரிசு- மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி.

பரிசளிப்பில் யாழ். றோட்டறிக்கழகத்தலைவர் திரு. ஆர். ஜே. குணரத்தினம், பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோர் உரையாற்றினர். இந்தப் பொருட்காட்சியை ஒழுங்குசெய்த றோட்டறிக்கழகத்தைக் சேர்ந்த டாக்டர் பா. சோ. பாரதி நன்றி தெரிவித்துப் பேசினார். (அ)

### CLASSES

C. E. I. Exam 1979 London Council of Engineering Examination part one Classes Commencing 15th July at Jaffna. Contact: Organizer 26 Seenivasagam Road, Koddady. 9735

### அறிவித்தல்

சித்தன்கேணி கொங்கோ அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள் பரிசுபெற்றோருக்கு தனித் தனியே அறிவிக்கப்பட்டுள்ளன. மகா. திருக்கோபன் காரியதரிசி. 9743

# "தென்மராட்சியில் இசைப் பரம்பரையை உருவாக்கியவர்"

## சங்கீதபூஷணத்துக்குப் பண்டிதமணி பாராட்டு

(யாழ்ப்பாணம்)



சி, விநாசித்தம்பி

தென்மராட்சியில் இசைப் பரம்பரை யொன்றை உருவாக்கி இசையாதாரையும் இசைவித்து அப்பரம்பரையைப் பேணிவளர்த்து நிலை பெறச் செய்துவரும் இசையரசு திரு. சி. விநாசித்தம்பியின் பணி, பாராட்டியமையாது. இவர் தேடக்கிடையாத மாமணி, தனிப்பெரும் பொக்கிஷம் இவரது தெய்வ பக்தி அருள்வாழ்வு பணிவு இன்சொல் இன்முகம் இவை மேலானவை இவரது இசைப் பெருக்கு ஆற்றொழுக்குப் போல் இடையீடின்றி என்றும் நின்று நிலவிப்பெருகுவதாக இவ்வாறு சங்கீத பூஷ

(6-ம் பக்கம் பார்க்க)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

இல. ஈடு 1869

1. கந்தையா சச்சிதானந்தம், தெல்லிப்பழை தென்மேற்கு, தெல்லிப்பழை.

வழக்காளி

எதிராக

2. முருகர் பொன்னையா கைம்பெண் அன்னலட்சுமி, சுருட்டுத் தொழிற்சாலை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

தானுகவும் இறந்த தனது சணவன் முருகர் பொன்னையாவின் சொத்துக்களின் சட்டப்பிரதிநிதியாகவும்

எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் 1869-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 19[illegible]-ம் ஆண்டு ஆடி மாதம் 18-ந் திகதி ([illegible]-7-78) செவ்வாய்க்கிழமை [illegible]0 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி 10,588/- 19-2-77 தொடக்கம் 16-12-77 வரைக்கும் 6000/- வருடமொன்றுக்கு 12% வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரைக்கும் 9% வட்டியும் வழக்குச்செலவு ரூபா 920-58. இதில் நடைபெற்ற செலவு ரூபா 630-25 நடைபெற வேண்டிய செலவு 153-65. மேலதிக சமயசமயாச் செலவு 136-7[illegible].

### ஆதன இடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணப் பெரும்பிரிவு, வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை சத்துருசப்பை நிலபரப்பு 34½ வடலிகளும் எல்லை கிழக்கு தரும ஆதனமும் நகுலேஸ்வரி றோட்டும் வடக்கு இளையதம்பி சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு பின்னால் காட்டப்படும் ஆதனம் தெற்கு ஒழுங்கையும் தரும ஆதனமும் இவ்வெல்லைக்குட்பட்டவைகளுட் சொரியலாய் ¼ம் அதற்குரியவைகளும்.

2. மேற்படி இறை சத்துருசப்பை நிலப்பரப்பு 38½ எல்லை கிழக்கு மேலே காட்டப்பட்ட 1ம் ஆதனமும் இளையதம்பி சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் வடக்கு கணபதிப்பிள்ளை பெண் நாகம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு சிறுவிளான் ஊரெல்லை, தெற்கு ஒழுங்கை இவ் வெல்லைக்குட்பட்டவைகளுட் சொரியலாய் 29/123ம் அதற்குரியவைகளும்.

மு. விஜயராசன்,
நீதிமன்ற விற்பனவு விலைமதிப்பாணையாளர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
20-6-78.

9740

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### 31-5-1978 வரை அனுமதிக்கப்பெற்ற ஏலவிற்பனையாளர்கள், தரகர்கள் பற்றிய நிரல்.

(அ) ஏலவிற்பனையாளரும் தரகரும்.

| பெயர் | முகவரி |
| --- | --- |
| எஸ். ஏ. ரி. வடிவேலு | கே. கே. எஸ். வீதி, கோண்டாவில். |
| பொ. முத்துராஜா | 49, திருகோணமலை வீதி, கண்டி. |
| கே. பி. பாலகிருஷ்ணன் | 692, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| பி. அந்தோனிப்பிள்ளை | [illegible]0, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். |

(ஆ) ஏலவிற்பனையாளர்.

| | |
| --- | --- |
| வி. ஏரம்பமூர்த்தி | காரைநகர் கிழக்கு, காரைநகர். |
| சி. மகாதேவன் | 643 (119) கே. கே. எஸ். வீதி. |
| வி. செ. குட்டிப்பிள்ளை | 643, கே. கே. எஸ். வீதி. |

க. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
3-7-78.

9739

## திறப்பு விழா



"செந்தூர் ஏஜென்சி"
பிரதான வீதி, நெல்லியடி.

காலம்:
6-7-78 வியாழக்கிழமை காலை

கீழ்க்காணும் கொம்பனிகளின்
அங்கிகரிக்கப்பட்ட மொத்த, சில்லறை
விற்பனையாளர்



- லீவர் பிரதர்ஸ்
- S. P. S. ஜெயம் அன்ட் கோ. (கோபால் பற்பொடி)
- சிலோன் நியூநஷனல் பூட்ஸ் கொம்பனி (லக்ரஜின் முதலியன)
- ரெகிற் அன்ட் கொல்மன் கோ., (டிஸ்பிறின், ஹோர்லிக்ஸ் முதலிய)ன
- சிலோன் மாச் கொம்பனி (யானைமார்க் தீப்பெட்டி)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— திருமதி எஸ். கனகசிங்கம்

9737

ஈழநாடு
The Eelanaadu

## கடற்றொழில் விருத்தி

கிழக்கிலங்கையில் கஷ்டமுறும் ஏழைக் கடற்றொழிலாளருக்கு உதவுமுகமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு கடற்றொழில் வங்கியை நிறுவவிருப்பதாக கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தமது மட்டக்களப்பு விஜயத்தின்போது நாவலடியில் நடைபெற்ற வரவேற்பில் உறுதியளித்திருக்கிறார்.

நாட்டின் கடற்றொழிலாளர்களில் பத்திலொரு பங்கினர் கிழக்கில் வாழுகின்றனர். மட்டக்களப்பை ''மீன்பாடும் தேனுடு'' என்று அழைப்பர். சிறந்த மீனுக்கும் இருலுக்கும் பெயர்பெற்றது மட்டக்களப்பு. ஆனால் இன்று அங்கே மீனுக்குத் தட்டுப்பாடு மட்டுமல்ல பெயர் பெற்ற மட்டுறலைக் காண்பதும் அரிதாகிவிட்டது.

கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்காக சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் பத்தாண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு பிரகாரமாக வெளியிடப்பட்டது. பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் அத்திட்டம் செயல்படவில்லை.

கடற்றொழிலாளருக்கென காப்புறுதித்திட்டம் ஒன்று கொண்டுவரப்போவதாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா மட்டக்களப்பில் தெரிவித்திருக்கிறார். இதற்குமுன்னரும் கடற்றொழில் அமைச்சர்களாகப் பதவி வகித்தவர்கள் இப்படியான திட்டங்கள் பற்றி அடிக்கடி கூறிவந்திருக்கின்றனர். ஆனால் அவை செயல்படவில்லை.

கடற்றொழில் விருத்தி யென்ற பெயரால் இதுவரை பெருந்தொகைப் பணம்தான் செலவாகியிருக்கிறதே தவிர கடற்றொழில் விருத்திபெறவில்லை. வடக்கில் மயிலிட்டியில் மீன்பிடித்துறை முகம் அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது, இன்று அது அரைகுறையாகக் கிடக்கிறது.

கடற்றொழிலாளருக்கான வீடமைப்புத் திட்டங்கள் சில பகுதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மற்றும் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

கடலால் சூழப்பட்டநாடு நமது இலங்கை. நமதுகடலில் பிறநாட்டு மீன்பிடிக் கப்பல்கள் வந்து அத்துமீறி மீன்பிடித்துச் செல்வதுபற்றிப் பேரவையிலேகூடப் புகார் கூறப்பட்டது. கடல் வளத்துக்கு நமக்குக் குறைவில்லை.

ஆனால் நமது தேவைக்காக வெளிநாடுகளிலிருந்து தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களை இறக்குமதி செய்ய வேண்டிய கேவலமான நிலையிலிருக்கிறோம்.

கடற்றொழிலில் நமது நாடு விருத்தியடைவதற்கு கடற்றொழிலாளருக்கு நவீன மீன்பிடி உபகரணங்களும் அதில் தகுந்த பயிற்சியும் அளிக்கப்பட வேண்டியது அவசியம்.

மீன்பிடிப்பகுதிகளில் மீன்பிடிக்துறைகள் அமைக்கப்படவேண்டும். கடற்றொழிலாளர் சுலபமாகக் கடனவசதி பெறக்கூடிய முறையில் அந்தந்தப் பகுதிகளில் கடற்றொழில் வங்கிக் கிளைகள் அமைக்கப்படுவதும் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதாகும். கடற்றொழிலை நம்பியிருக்கும் குடும்பங்களுக்கு எதிர்காலம் பற்றிய அச்சத்தை நீக்குவதற்கு கடற்றொழிலாளருக்கு காப்புறுதித் திட்டமொன்று இனியும் தாமதமின்றிக் கொண்டுவர வேண்டியது அவசியம். மீன்பிடித் துறைகளிலேயே கடற்றொழில் கூட்டுத்தாபன நிலையங்கள் அமைத்து மீன் கொள்வனவு செய்வதன்மூலம் தரகர் தொல்லையை ஒழித்துக் கடற்றொழிலாளர் பயனடையவும் வழிசெய்யவேண்டும்.

நாட்டின் வளத்தைப் பயன்படுத்துவதுடன் கடல் வளத்தையும் நன்கு பயன்படுத்துவது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அவசியமாகும்.

கடலில் நிறைய திரவியங்களிருக்கின்றன. அதைத் தேடிப் பெறுவதில் தான் நமது சக்தி தங்கியிருக்கிறது. கடற்றொழில் அமைச்சர் தமது சக்தியை இதில் செலுத்தி வெற்றி காண்பாரென்று எதிர்பார்ப்போம்.

### யாழ். குடாநாட்டில்

# சனப்பெருக்கம் அதிகரித்து

## உணவுற்பத்திப் பிரதேசம் குறைகிறது

### பேராசிரியர் "செல்வா" எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாணக் குடாநாட்டில் சனப்பெருக்கம் அதிதீவிரமாகப் பெருகிவருகிறது. ஆனால் உணவு உற்பத்திப் பிரதேசம் குறைந்துகொண்டே போகிறது. இத்தகைய மிகையான சனப்பெருக்கத்தால் எதிர்காலத்தில் இங்கு பாரதூரமான விளைவுகள் ஏற்படும். எனவே இங்குள்ள மக்கள் வவனியா, கிளிநொச்சி, முல்லைத்திவு போன்ற பகுதிகளுக்குச் சென்று பரந்துவாழ வேண்டும். இதனையிட்டு அரசியல்வாதிகள் மிகுந்த கவனமெடுக்கவேண்டும்''

இவ்வாறு இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற்ற வளாக புவியியல் மன்ற ஆண்டு விழாவில் புவியியல் துறைத் தலைவர், பேராசிரியர் சோ. செல்வநாயகம் எச்சரிக்கை விடுத்தார்.

காலை 'க. பொ. த. ப. உயர்தர வகுப்புகளில் புவியியல் கற்பித்தல்' எனும் பொருள்பற்றி நிகழ்த்தப்பட்ட கருத்தரங்கில் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாலை நிகழ்ச்சிகளுக்கு மன்றத் தலைவர் செ. சண்முகநாதன் தலைமைவகித்தார். வளாகத் தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார்.

''யாழ்ப்பாணப் பகுதியின் மீன்பிடித்தொழிலின் அண்மைக்காலப்போக்கும், பிரச்சனைகளும்'' என்ற விடயம் பற்றி மீன்பிடித் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி ரூபமூர்த்தி உரையாற்றினார்.

''யாழ்ப்பாணப் பகுதியின் குடிசனப் பரம்பலும், மூலவளப் பயன்பாடும்; சூழலில் ஏற்பட்டுவரும் தாக்கமும்'' என்ற பொருள்பற்றிப் பேசிய பேராசிரியர் செ. செல்வநாயகம் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது;

'யாழ்குடா 430 சதுர மைல் விஸ்தீரணம் கொண்டது எனினும் இங்கு குடிப்பரம்பல் ஏனைய பகுதிகளைவிட செறிவு கூடுதலாக உள்ளது. இது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அனைவரும் உணர்ந்து குடிசனக்கட்டுப்பாடுகளை அனுசரிக்கவேண்டும். கட்டுப்பாடுகளை விரும்பாதவர்கள் வெளியிடங்கட்குச் சென்று குடியேறுதல் விரும்பத்தக்கது.

#### விறகுத் தட்டுப்பாட்டை நீக்கவழி

யாழ்ப்பாணத்தில் தற்போது விறகுத்தட்டுப்பாடு நிலவுகிறது. இதனைத் தீர்ப்பதற்கு நான் ஒரு ஆலோசனை கூறவிரும்புகின்றேன். இங்குள்ள வரண்ட பிரதேசங்களில் விறகுக்குரிய காட்டு மரங்களை வளர்த்து சிறுகாடுகளை உண்டாக்கவேண்டும். மணற்பிரதேசங்களிலும் இத்தகைய காட்டுமரங்களை வளர்ப்பது சாத்தியமே. இங்கு தரைக்குக்கீழ்நீர் காணப்படுகிறது. இதற்கு காட்டிலாகாவும் நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுவருகிறார்கள் என நம்புகிறேன். இதனால் வரண்ட நிலம் தோட்ட நிலமாகவும் மாறவாய்ப்புண்டு.

யாழ். குடாநாட்டின் வடபகுதியில் சீமெந்துத் தயாரிப்புக்காக, கற்களைத் தோண்டுவதால் அங்கு ஏற்படும் பள்ளங்களில் கடல்நீர் புகுந்து நிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் அபாயம் எதிர்காலத்தில் நேரிடலாம். எனவே திட்டமிட்டு சில பகுதிகளில் மாத்திரம் இத்தகைய அகழ்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

#### கடல் அரிப்பைத் தடுக்க...

கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் முருகைக்கற் பாறைகள் அலைகளின் தாக்கத்தைக் குறைத்து, நிலஅரிப்

(5-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

முடியாததையும்செய்ய முடியும்படி செய்யக் கூடியது தெய்வநம்பிக்கைதான்.

--சுவாமி சிவானந்தர்

### யாழ். வளாகத்திலிருந்து

## வெளியேறும் பட்டதாரிகளுக்கு மாணவர் தலைவர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

'வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அமைப்புகளுக்கும், தொழில் நுட்பத்திற்கும் பதிலாக எமதுதாய் நாட்டின் அடிப்படையிலிருந்து எமக்குத் தேவையான அமைப்புகளையும், தொழில் நுட்பத்தையும் கட்டி எழுப்பும் மகத்தானபணி உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.'

இவ்வாறு யாழ். வளாகத்திலிருந்து மூன்று வருட முடிவில் வெளியேறும் கலைப்பீட மாணவர்களின் பிரிவுபசாரத்தில் தலைமையுரையாற்றிய மாணவர் மன்ற தலைவர் திரு. வ. ஐ. ச. ஜெயபாலன் கூறினார்.

திரு. ஜெயபாலன் தமது உரையில் மேலும் கூறியதாவது:

'எமது மக்களின் பூரண சுதந்திரத்தையும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் பெறுவதற்கான நீண்டகாலப் போராட்டத்தை துரிதப்படுத்துவதற்கு எமது யாழ். வளாகம் கலை, விஞ்ஞான பட்டதாரிகளை எம்தாய் நாட்டுக்கு முதன்முதலாக தருகின்ற பெருமையைப் பெறுகிறது.

எங்கள் பிரச்னைகளைத் தீர்க்கும் பாதை எது? என்று தவிர்க்கும் இளைய சமுதாயத்தை தன்னம்பிக்கையுடன் இருளில இருந்து மீட்டு வாருங்கள், என்று நான் அரசியல் வாதிகளிடம் அறை கூவல் விடுக்க விரும்புகிறேன்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வளாகத் தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் தமது பல்கலைக் கழக அனுபவங்களை நகைச்சுவையுடன் கூறி அனைவரையும் மகிழ்வித்தார்.

மனிதப் பண்பியல் பீடாதிபதி பேராசிரியர் ஆ. தர் ஜெயசிங்கம், கலாநிதி கா. இந்திரபாலா, கலாநிதி அ. சண்முகதாஸ்ஆகியோர் வெளியேறும் பட்டதாரி மாணவர்களை வாழ்த்தி ஆசியுரை வழங்கினர்.

வளாக மாணவர்கள் யோ இந்திரன், செல்வி நந்தினி விசாகன், மு. திருநாவுக்கரசு, நடராஜமூர்த்தி, கிருஷ்ணபிள்ளை ஆகியோர் உரையாற்றினர். இதனைத் தொடர்ந்து விருந்தினர்கட்கு 'இரவு உணவு' அளிக்கப்பட்டது. பல நகைச்சுவை நிகழ்ச்சிகளும், பல விளையாட்டுகள், கேளிக்கைகளும் இடம் பெற்றன. ஈற்றில் 'மேல் நாட்டு இசைக்' குழுவினரின் ஆங்கில இசை ஒலிக்கப்பட்டு, மாணவர்கள் நடன விருந்தளித்து அனைவரையும் மகிழ்வித்தனர். (ச-இ)

## கதிர்காமத்துறை கந்தா!

### குறள் வெண்பா

கதிர்காமக் கந்தா! நின் காலடிகள் வேண்ட
அதிகவருள் செய்வாய் அணைத்து

### விருத்தம்

கந்தா! கடம்பா!! காங்கேயா!!!
கவின் கதிர் காமத் துறைகந்தா!
நந்தாப் புகழ்கொள் நம்மிறைவா!
நற்கதிர் காமத் துறைகந்தா!
எந்தாய் நீயே எழின் முருகா!
எளியேன் இன்னல் அறுப்பாயே!
சிந்தா குலத்தைத் தீர்ப்பா யே!
சீர் கதிர் காமத் துறை கந்தா!

-- கவியரசு முருகசூரியன்

(இன்று கதிர்காம உற்சவம் ஆரம்பம்)

## நாடும் நடப்பும்

''கிறிஸ்துவுக்கு முன் இரண்டாம் நூற்றாண்டிலே எல்லாள மன்னன் அநுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்து வந்தான். அவன் ஒரு தமிழ் மன்னன். சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் அவன் நீதியாகவே நடந்துவந்தான். அதனால் அவன் நீதி வழுவா எல்லாளன் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டு வந்தான். எல்லாள மன்னனுடையது போன்ற நீதியான ஆட்சியையே நாமும் நடத்த விழைகிறோம். அதற்காகத் தர்மத்தின் அடிப்படையிலான தார்மக சமுதாயத்தைச் சிருஷ்டிக்க விரும்புகிறோம்''

முஸ்லிம்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்காக கொழும்பிலுள்ள பண்டாரநாயகா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் உலகநாடுகளிலிருந்து வந்து கூடிய அறிஞர் பெருமக்கள் மத்தியில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு எல்லாள மன்னன் பற்றி மேற்சண்டவாறு குறிப்பிட்டது நமக்கெல்லாம் பெருமைதான்.

சகலரையும் சமமாக மதித்து நீதியான ஆட்சி நடத்த விழையும் அவரது மனப்பான்மையையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

எல்லாளனையே மறைத்து துட்டகைமுனுவை மட்டும் தமது நோக்கத்துக்காக எடுத்துக் காட்டி வரலாற்றையே திரித்துக் கூறுபவர்கள் மலிந்துவிட்ட இக்காலத்தில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனு எல்லாளனின் நீதிவழுவா ஆட்சி பற்றி உலகப் பிரமுகர்கள் மத்தியில் எடுத்துக் கூறினாரென்றால் அது சாதாரண விஷயமல்ல.

எல்லாளனைப் போரில் வெற்றிகொண்ட துட்ட கைமுனு போரில் மாண்ட எல்லாளனின்வீரத்துக்கும் அவனது நீதி வழுவா நெறி முறைக்கும் மதிப்பளித்து அவனுக்குச் சமாதி எழுப்பி அப்பாதையால் செல்வோர் சமாதிக்கு அஞ்சலி செலுத்திச் செல்லவேண்டுமென்று உத்தாவிட்டான் என்பது சரித்திரம்.

எல்லாளனை வெற்றி கொண்ட பின் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டதுட்டகைமுனுவின் இந்த நல்ல பண்பை சமீபகாலத்தில் அரசியல் வாதிகள் மட்டுமல்ல நூலாசிரியர்களும் கூட மறைத்துவந்தனர்.

ஜனாதிபதி ஜே. ஆர். உண்மை வரலாற்றை உள்ளபடியே ஒளிவுமறைவின்றி உலகப் பெரியார்கள் மத்தியில் கூறியது அவரது உள்ளத்தைக் காட்டுவதாக உள்ளது.

ஃ ஃ ஃ

எல்லாளன் நீதிவழுவா ஆட்சி நடத்திய போதுதான் துட்டகைமுனு எல்லாளனுக்கு எதிராகப் போர் தொடுக்க முன்வந்தான். படுக்கையில் முடங்கிப்படுத்திருந்த துட்டகைமுனுவிடம் அவனது தாயார் ''ஏன் நீட்டிநிமிர்ந்து வசதியாகப் படுக்காமல் முடங்கிப் படுத்திருக்கிறாய்?'' என்று கேட்டாராம்.

அதற்கு ''மூன்று பக்கமும் கடல்சூழ்ந்திருக்கிறது, மற்றப் பகுதியில் தமிழர். இந்நிலையில் நான் எப்படி நீட்டி நிமிர்ந்து வசதியாகப் படுக்கமுடியும்!'' என்று பதிலளித்தானும் துட்டகைமுனு!

நீதிவழுவா ஆட்சி நடந்த போதும் ஒரு துட்ட கைமுனு தோன்றினான். நீதி வழுவா ஆட்சி நடத்தவிழையும் ஜனாதிபதி ஜே. ஆருக்கு இப்பொழுதும் பல துட்டகைமுனுக்கள் முடங்கிக் கிடக்கிறார்களென்பது தெரியாமலிருக்காது என்றே நினைக்கிறேன்.

--ஊர்சுற்றி

# ஜனதாகட்சி நெருக்கடி விரைவில் தவிர்க்கப்படும்

## புதுடில்லியில் வாஜ்பாய்

புதுடில்லி, ஜூலை. 4
ஜனதா கட்சிக்குள் இப்போது தோன்றியுள்ள நெருக்கடி விரைவில் தவிர்க்கப்பட்டுவிடுமென்று இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் ஜனதாகட்சியின் புதிய அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் திரு. வாஜ்பாய்மேலும் கூறியதாவது;

கட்சிக்குள் பிரச்னைகள் தோன்றினால் அவற்றை பகிரங்கமாக விவாதிக்காமல் கட்சிக்குள்ளேயே விவாதித்து அவற்றிற்குத்தீர்வுகாணவேண்டும்.

மீண்டும் நாட்டில் பாஸிஸ சக்திகள் தலைதூக்காமல்பாதுகாக்கவேண்டியது ஜனதாகட்சியினரின் முக்கியகடமையாகும். இதைஉணர்ந்துசகலரும் பணியாற்றவேண்டும்.

கட்சிக்குள் ஒழுங்குக் கட்டுப்பாடு மிகமிக அவசியம். ஒழுங்கும் கட்டுப்பாடும் இன்றேல் மக்களுக்கு சிறந்த சேவையை அளிக்கமுடியாது. (இ)

## இன்று நடக்கும் நேர்முகப்பரீட்சை

(உருத்திரபுரம்)
கிளிநொச்சிக் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை அனுமதிக்கான நேர்முகப்பரீட்சை இன்று காலை பரந்தன் மக்கள்வங்கி மேல்மாடியில் உள்ள கூட்டுறவு அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

மேற்படி பயிற்சிக்காக கூட்டுறவுப்பணியாளர்கள் உட்பட 60 க்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துள்ளனர். (அ)

## "அமெரிக்காவின் உற்ற நண்பர்"

வாஷிங்டன், ஜூலை. 4
"இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் ஒரு பெருந்தன்மையான மனிதர். அவர் அமெரிக்காவின் உண்மையான நண்பர்".

இவ்வாறு அமெரிக்க உப ஜனாதிபதி திரு. மொண்டேல், திரு. பெகினுக்குப் புகழ்மாலை சூட்டியுள்ளார்.

இஸ்ரேலியப்பிரதமர் பதவியிலிருந்து விலகுதல் பற்றிக் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இஸ்ரேலிய அமைச்சரவையில் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் எதிரொலியாக திரு. பெகின் ராஜினாமாச்செய்யக்கூடுமென்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

மத்தியகிழக்கு விவகாரத்தில் இஸ்ரேலியப் பிரதமர் அமெரிக்காவின் ஆலோசனை பெற்றதனையொட்டியே இக்கருத்து வேறுபாடு உருவானதாம். (உ)

உத்தியோகபூர்வ - இந்திரா

# காங்கிரஸ்களை இணைப்பதில்

## திருமதி காந்திக்கு அக்கறையில்லை

### மகாராஷ்டிர முதல்வர் கருத்து

பம்பாய், ஜூலை.
உத்தியோகபூர்வ காங்கிரஸும் இந்திரா காங்கிரஸும் இணையவேண்டும் என்பதில் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு அக்கறையே இல்லையென்று மகாராஷ்டிர முதல்வரும், இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவருமான திரு. வசுந்திரா பட்டேல் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சிகளின் இணைப்புக் குறித்து திருமதி காந்தியை புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுநடத்திய பின்னர் பம்பாய் வந்து சேர்ந்தபோதே திரு. வசுந்திரா பட்டேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்முறை தாம்மேற்கொண்டுள்ள காங்கிரஸ் இணைப்பு முயற்சியினால் பயன் எதுவும் கிட்டாவிட்டால் தாம்மேலும் இவ்விடயத்தில் முயற்சி செய்யப்போவதில்லையென்றும் அவர் பம்பாயில் நிருபர்களிடம் கூறினார். (இ)

## எகிப்து அதிபருடன் பேசுவார்

கெய்ரோ, ஜூலை 4
எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத் அடுத்த ஞாயிறன்று இஸ்ரேலிய தொழிற்கட்சித்தலைவருடன் பேச்சுவார்த்தைநடாத்துவார் வியன்னாவில் நடைபெறும் இப்பேசுக்கள் மத்திய கிழக்கு நிரந்தர சமாதானம் குறித்தே இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ)

## சரண்சிங்,ராஜ் வெளியேற்றம் கட்டுப்பாட்டை வளர்க்கும்

### அமைச்சர் பர்னலா கூறுகிறார்

புதுடில்லி, ஜூலை 4
ஜனதா அமைச்சரவையில் இருந்து உள்துறைஅமைச்சர் திரு. சரண்சிங்கையும் சுகாதார அமைச்சர் திரு. ராஜ் நாராயணையும் வெளியேற்றிய செயல் அமைச்சரவையில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வளர்க்க உதவும்.

இவ்வாறு விவசாயபாசன மந்திரி திரு.பர்னலா கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் இருவர் மீதும் சரியான நடவடிக்கையையே எடுத்துள்ளார் என்றும் இதனால் ஜனதாவுக்குள் இப்போது தோன்றியுள்ள நெருக்கடி விரைவில் அகன்றுவிடும் என்றும் திரு.பர்னலா தெரிவித்துள்ளார். (இ)

## லண்டனில் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தை

### எகிப்து - இஸ்ரேல் - யு. எஸ். கலந்துகொள்ளும்

கெய்ரோ, ஜூலை. 4
மத்திய கிழக்கு சமாதானம் குறித்து லண்டனில்நடைபெறவுள்ள இஸ்ரேல், அமெரிக்க வெளிநாட்டமைச்சர்கள் கலந்துகொள்ளும் மகாநாட்டில் பங்குபற்ற எகிப்து இணக்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க உபஅதிபர் திரு. மொண்டேலின் எகிப்திய விஜயத்தின் போது எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத் தமது இணக்கத்தைத்தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டர் விடுத்த வேண்டுகோளுக்காகவே தாம் எகிப்திய வெளிநாட்டமைச்சரை இம்மகாநாட்டில்கலந்துகொள்ளுவதற்கு அனுப்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக எகிப்திய அதிபர் தெரிவித்தார்.

இம்மகாநாட்டிற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படுமென்றும் திரு. மொண்டேல் தெரிவித்தார்.

மத்தியகிழக்கு அமைதி முயற்சி குறித்து திரு. மொண்டேல் இஸ்ரேலிய-எகிப்திய தலைவர்களுடன் பேச்சு நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## தென் லெபனான் யுத்தத்தில் 145 பேர் பலி!

பெய்ரூட், ஜூலை. 4
லெபனானில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் இன்றுமூன்றாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

இச்சண்டையில் 145 லெபனான் மக்கள் பலியாகினர் என்று பெய்ரூட் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை லெபனானில் யுத்த நிறுத்தத்தை உடன் அமுல் செய்யுமாறு ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சண்டைக்கான காரணங்கள் எதுவாக இருந்தாலும் உடன் சண்டையை நிறுத்துமாறு சண்டையில் ஈடுபட்டிருக்கும் அரபு சமாதானப்படையைச் சேர்ந்த சிரியதுருப்புக்களுக்கும் வலதுசாரி துருப்புக்களுக்கும் டாக்டர் வால்ட்ஹெய்ம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)




பாதுகாப்பு, நம்பிக்கை, சௌகரீகம்

இத் தனிச் சிறப்புக்கள், இலங்கை அடங்கிலுமுள்ள, முதலீடு செய்வோர்களிடையே பொது வழக்குச் சொற்களாகி, ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்டின் முதலீட்டு திட்டங்களுக்கு சிறந்த மவுசை ஏற்படுத்தியுள்ளன.

நீங்கள் முதலீடு செய்யும்போது உங்கள் பணத்திற்கு சம்பூரணமான முதலீட்டு பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா என்பதையும் அவ்வாறனமுதலீடு, சராசரி வருமானத்திற்கு மேற்பட்ட வருமானத்தையும் உத்தரவாதங்களையும், தனிப்பட்ட விசேஷ சேவை வசதியையும் அளிக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இவ்வசதிகளை எம்மிடம் முதலீடு செய்வோர் சுமார் இருபது ஆண்டுகளாக பெற்று இன்புற்றுவருகிறார்கள்.

முதலீட்டுத் திட்டங்கள்

| குறுகிய காலம் | நீண்ட காலம் | கால வைப்புகள் |
|---|---|---|
| 12% | 17½% | 18% |
| "முதலீட்டு சான்றிதழ்" வட்டியுடன் முதலீடு செய்த பணத்தை வட்டியுடன் இலகுவில் மீட்டுக்கொள்ளலாம். | 1 வருடம் - 14 1 2% வருடமொன்றுக்கு<br>2 வருடம் - 15% வருடமொன்றுக்கு<br>3 வருடம் - 15 1/2% வருடமொன்றுக்கு<br>4 வருடம் - 16% வருடமொன்றுக்கு<br>5 வருடம் - 16 1/2% வருடமொன்றுக்கு<br>6 வருடம் - 17 1 2% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக்கொள்ளலாம். | 6 மாதங்கள் - 12% வருடமொன்றுக்கு<br>12 மாதங்கள் - 15% வருடமொன்றுக்கு<br>18 மாதங்கள் - 18% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக்கொள்ளலாம். |
| மாதாந்த வட்டி | மாதாந்த வட்டி | முதிர்ச்சியின் பேரில் வட்டி |

ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்,.
HPT பில்டிங், கொழும்பு-8, த. பெ. இல. 1077
ரெலெக்ஸ்: 1203, கொழும்பு, போன்; 94356. 94320.

கிளை அலுவலகங்கள்:
★ 2 - 3, நவீன சந்தை, பெரியகடை, யாழ்ப்பாணம். தொலைபேசி; 7698
8, புத்தளம் ரோட், குருணாகல்.

(RAVI)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
**வெள்ளிக்கிழமை விரதம்**

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
**SPYS**

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-15, 10-00
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
**மாணவன்**


## சபாபதி இல்லம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சபாபதி இல்லம் 762 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை சுவீகரித்தது.

செல்லையா இல்லம், சபாரத்தினம் இல்லம், கார்த்திகேசு இல்லம், நாகலிங்கம் இல்லம் முறையே 657½ 644, 592 1 2, 449 புள்ளிகளைப் பெற்று 2-ம், 3-ம், 4-ம் இடத்தைப் பெற்றன,

இப்போட்டியில் 17 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. 19 வயதுக்குட்பட்ட சாம்பியன்களான செல்லையா, கார்த்திகேசு இல்ல கப்டன்கள் செல்வன் ஏ. முரளீதரன், என். ராஜேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-இ)


**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - ஸ்ரீவித்யா
ஜெயசுதா - சுந்தரராஜன்
**அபூர்வ ராகங்கள்** (புத்தம் புதிய பிரதி)

**சாந்தி** யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா-அசோகன்-மனோகர்-சோ
**க ண வ ன்,** புத்தம் புதிய பிரதி

**REGAL** Daily at 4-45, 7- & 9-30 P. M. only.
KEN CLARK in
**Road To Fort Alamo**
(Scope Color)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராமராவ்-ராஜசுலோசனு
**ராஜமகுடம்**

**லிடோ** (யாழ்.நகர்)
போன்: 7692
சிவகுமார், அல்கா
**மதனமாளிகை**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
**பேரும் புகழும்**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை. விஜயா
நடித்த
**மன்மத லீலை**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி 2 தினங்கள்
முத்துராமன்-சந்திரகலா-ஸ்ரீவித்யா
நடித்த
**காலங்களில் அவள் வசந்தம்**


## யாருடையது?

கீரிமலைக்கேணிக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்ட ''சாரதி லைசென்ஸ்'' ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## சனப்பெருக்கம்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பைத் தடைசெய்துள்ளன. இக்கற்பாறைகளின் வளர்ச்சி நில நெய்களின் பரவலாலும், மணற்படிவுகளாலும் பாதிக்கப்படலாம். எனவே நில அரிப்பு ஏற்பட இடமுண்டு. நிலம் பேணப்படுவதற்கு இத்தகைய முருகைக் கற்பாறைகள் பேணப்பட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

### நன்னீர் உவர்நீராகிறது

யாழ்- குடாநாட்டில் பயிர்ச் செய்கைக்காக இயந்திர நீரிறைப்பு, அதிகஅளவில் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் நன்னீர் உப்புநீராக மாறிவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஒருகால கட்டத்தில் குடாநாடு முழுவதுமே உவர் நீராகமாறும்அபாயம் உண்டு. இங்கு 55 சதுர மைல் பிரதேசம் ஆராய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, 23வீதமான கிணறுகள் நீர்வளம் கெட்டு உவராக மாறியமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிக் கிணறுகள் தற்போது உவர்நீராக மாறிவருகின்றன. அத்துடன் நீரில் நைத்திரேற்றுப் படிவுகள் அதிகரித்துவருகின்றன. காரணம் விவசாயிகளின். இரசாயன உரங்கள்; கிருமிநாசினிகளின் மிகையான பயன்பாடே நீரினை அளவாகப் பாவிப்பதற்கு 'சுழல் நீர்ப்பாசனம்' எனும் விசேடமுறை எதிர்காலத்தில் பயன்படும் என நம்புகிறேன்.

### சுவாசப்பை வியாதிகள்...

இங்குள்ள சீமெந்து, இரசாயன தொழிற்சாலைகளின் விளைவால் வெளியேறும் தூசிகள், வாயுக்கள் காற்றை மாசுபடுத்துகின்றன; தாவரங்களைப் பாதிக்கின்றன; இதனால் மக்களைப் பாதிக்கின்றன. சுவாசப்பை வியாதிகள் பெருக வாய்ப்புண்டு, இவ்வாயுக்களைக் கட்டுப்படுத்தும் இயந்திரங்கள் இங்கு இல்லை. இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்ப்பாணப் பட்டினப் பகுதியில் கழிவுகள் தேங்கி நிற்பதால், சூழலில் பலவித பாதிப்புகளை ஏற்படுத்தும் இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறைவாகவே காணப்படுகின்றன. கழிவு வடிகால்கள் நன்கு பேணப்பட்டு கழிவுகளை நீக்கும் வழிவகைகளை எடுக்கவேண்டும். யாழ் பட்டினப் பகுதியில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் வாழ்வதால் அவர்களின் குடிநீர்; கழிவுநீர் பிரச்சினையை சிந்தித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

பேராசிரியர் வித்தியானந்தன் தமதுரையில், ''யாழ் வளாகம், யாழ். பிரதேசத்தைச் சூழ்ந்தது. எனவே இப்பிரதேச வளர்ச்சி. ஆக்கம் பற்றி நாம் ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளோம். அடுத்த மாதத்தில் இவ்வளாகம் பூரண பல்கலைக் கழகமாக மாறியபின்புவியியல் துறையை பலகோணங்களிலும் விருத்தி, செய்ய திட்டமிட்டுள்ளோம். இத்துறைக்கென தனிக் கட்டிடம்; உபகரணவசதிகள்சிறந்த முறையில் அளித்து சிறப்பானதாக மாற்றுவோம்'' என்றார்.

கலாநிதி ரூபமூர்த்தி யாழ்ப்பாணப் பகுதியின் மீன்பிடித் தொழிலின் பிரச்னைகள் தொழிலாளரின் பிரச்னைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்து மீன்பிடித்திட்டம் பிரதேச ரீதியாக தீட்டப்படவேண்டும் என்றும் வலியுறுத்திப் பேசினார்.

யாழ்ப்பாணத்தில்

# பண்டிதமணிக்குப் பாராட்டு விழா

## விரிவாக நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

''ஈழத்தின் தலைசிறந்த தமிழ் அறிஞர் என இலங்கைப் பல்கலைக்கழகம் எங்கள் குருநாதர் பண்டிதர் ஐயாவுக்கு இலக்கிய கலாநிதி என்ற கௌரவப் பட்டத்தினை வழங்கியிருப்பது ஈழத்தமிழர் வரலாற்றில் முக்கிய சரித்திரமாகும். பண்டிதர் ஐயாவுக்குக் கலாநிதிப்பட்டம் கிடைத்த அதே வேளையில் எண்பது வயதும் ஆரம்பித்துள்ளது. இவ் விசேஷங்களை ஒட்டி பண்டிதர் ஐயாவுக்குப் பாராட்டுவிழா ஒன்றினை எல்லாரது ஒத்துழைப்புடனும் நடாத்துவது பொருத்தமாகும். இவ்விழாவில் விசேஷ மலர் ஒன்றினையும், மக்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் கட்டுரைத் தொகுதியையும் வெளியிடுதல் முக்கிய அம்சமாகும்.''

கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையைப் பாராட்டிக் கௌரவிக்க இருப்பது பற்றிப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை தலைமையில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்வாலோசனைச் சபைக் கூட்டத்தில் விழாவைத் திறம்பட நடத்துதல், மலர்வெளியிடுதல் பண்டிதமணியின் கட்டுரைகளைத் தொகுத்துப் பாராட்டுவிழாவில் வெளியிடுதல் என்பன பற்றி சைவப் புலவர் க. சி. குலரத்தினம், பண்டித வித்துவான் க. கிருஷ்ணபிள்ளை, பண்டிதை பொன் பாக்கியம், திரு. க. தி. சம்பந்தன் உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

பாராட்டுவிழாச் சபைத் தலைவராக பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளையும் (வேலணை), செயலாளராக திரு. அ. பஞ்சாட்சரமும் (உரும்பராய்) தனாதிகாரியாக திரு. த. இராசேந்திரமும் (கொழும்புத்துறை), நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஈழத்தில் உள்ள சங்கங்கள் சபைகள், பழைய மாணவர்கள், அபிமானிகள் உட்பட அனைவரது ஒத்துழைப்பையும் பெற்று எதிர்வரும் ஆகஸ்ட் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பாராட்டுவிழாவை விஸ்தாரமான முறையில் நடத்துவதெனவும் பிரதான அம்சங்களாக பண்டிதமணியின் கட்டுரைத் தொகுதியையும், எண்பதாண்டு நிறைவுவிழா மலரையும் விழாவிலன்றே சகலருக்கும் கிடைக்க வசதி செய்வதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# கிராமப்புறப் பாடசாலைகள் முன்னேற வழி என்ன?

## பிரதம கல்வி அதிகாரி விளக்குகிறார்

(யாழ்ப்பாணம்)

''இங்குள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைச் சாவகச்சேரியிலுள்ள கல்லூரிகளுக்கு அனுப்புகின்றனர். சாவகச்சேரியிலுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளை யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளுக்கு அனுப்புகின்றனர். இந்த மாணவர் 'படையெடுப்பை' பெற்றோர் நிறுத்தினால்தான் இதுபோன்ற கிராமப் பாடசாலைகள் முன்னேற வழி பிறக்கும்.''

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதம கல்வி அதிகாரி திரு. பி. சிவபாதம் மேற்கண்டவாறு கூறினார்.

வரணி மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் பொ. சுந்தையினர், மாணவரின் அணி நடை மரியாதையை ஏற்று போட்டியை ஆரம்பித்துவைத்தார்.

திரு. சிவபாதம் மேலும் கூறியதாவது;-''இங்குள்ள பெற்றோர், குறைந்தது 4 வருடங்களுக்காவது தங்கள் பிள்ளைகளை வெளியிடங்களுக்கு அனுப்பாமல், இப்பாடசாலையில் கல்வி கற்கவிட்டால், இப்பாடசாலை முன்னேறும். 50 வருடத்திற்குமுன் உருவான இப்பாடசாலையில் 350 மாணவர்மட்டுமே கல்வி கற்பதாக இங்கு கூறப்பட்டது. இப்பாடசாலை வளர்ச்சி பெருததற்கான காரணம் இங்குள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வெளியிடங்களுக்கு அனுப்புவதுதான். பெற்றோரும், பழைய மாணவரும், ஆசிரியரும் அக்கறை எடுத்து இப்பாடசாலையை முன்னேற்ற வேண்டும்.

''சாவகச்சேரி எம்.பி.யுடன் ஆலோசனை செய்து, இப்பாடசாலைக்கு ஒரு சங்கீத வகுப்பறையும், தளபாடங்களும் பெற்றுத்தர முயற்சிப்பேன்.'',

அதிபர் க. பேரம்பலம் பேசுகையில், இவ்வட்டாரத்திலுள்ள பெரும் கல்லூரிகளுடன் போட்டியிட்டு, இப்பாடசாலை மாணவர் பரிசு பெற்றி

(6ம் பக்கம் பார்க்க)

வயாவிளான்

## 'ஓவர் கேம்' சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூகநிலையம் மின்னொளியில் நடாத்தும் கரபந்தாட்ட 2-ம் வகைச் சுற்றுப்போட்டி 'ஏ' பிரிவில் இன்று பிற்பகல் தெல்லிப்பழை வீனஸ் வி.க.வைஎதிர்த்து மிரியன் காடு உதயதாரகை வி. க. 'ஏ' யும் தொண்டமானறு தொண்டமான் வி. க. வைஎதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய வி. க. வும் புத்தூர் ஐ. வி. க. வை எதிர்த்து தொண்டமானறு ஸ்ரீ முருகன் வி. க. வும் தையிட்டி ஸ்ரார் வி.க.வை எதிர்த்து திருநெல்வேலி சிவன் வி. க. வும் மோதுகின்றன.

### ஐ.வி கழகம் வெற்றி

இதுவரை நடைபெற்ற போட்டியில் ''ஏ'' பிரிவில் ஆவரங்கால் ஐக்கிய வி. கழகம் இணுவில் இந்து வி. கழகத்தை 2-1 கேம்களால் வெற்றி யீட்டியுள்ளது. மத்தியஸ்தராக திரு.எம். பத்மநாதன் கடமையாற்றினார். தையிட்டி ஈஸ்வரி வி.கழகத்துக்கும் இடைக்காடு ச.ச. நிலையத்துக்குமான மற்றுமொரு போட்டியில் ஈஸ்வரி வி. கழகம் போட்டிக்கு சமுகமளிக்காமையால் இடைக்காடு ச. ச. நிலையம் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. (அ)

# "மீன் பெட்டிகளில் சிங்களவரின் சடலங்கள் வந்துள்ளதாக கூறினர்கள்"

## சன்சோனி கமிஷன்முன் வர்த்தகர்

(கண்டி)

'மீன்பெட்டியில் சிங்களவர்களின் சடலங்கள் கண்டிக்கு வந்திருப்பதாக தியத்தலாவையில் சிங்களவர்கள் சொன்னர்கள்'

கண்டியில் நடைபெற்றுவரும் சன்சோனி கமிஷன் விசாரணையின்போது சாட்சியமளித்த வர்த்தகர் ஆறுமுகம் பொன்னுச்சாமி மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:- 'நான் தியத்தலாவையில் பிறந்தவன். என் பெற்றேர் பதுளையைச் சேர்ந்தவர்கள். 1965-ம் ஆண்டுமுதல் நான் தியத்தலாவையில் வர்த்தகம் செய்துவருகிறேன். அந்நகரிலுள்ள மொத்தம் 25 கடைகளில் 5 கடைகள் தமிழர்களுக்குச் சொந்தமானவை. இரண்டு கடைகள் முஸ்லிம்களுடையவை. ஏனையவை சிங்களவருக்குச் சொந்தமானவை. என் கடை இருக்குமிடத்திலிருந்து கால் மைல் தூரத்தில் பொலிஸ்நிலையம் இருக்கிறது. அங்கிருந்து என் கடையைப் பார்க்க முடியும்.

ஆகஸ்ட 16ந் தேதி மீன் பெட்டிகளில் சிங்களவர்களின் சடலங்கள் வந்ததாகச்சொன்னர்கள். 17ம் 18ம் திகதிகளில் அனுராதபுரம், யாழ்ப்பாணம் கண்டி ஆகிய பகுதிகளில் வன்செயல்கள் இடம்பெற்றதாகக் கேள்விப்பட்டேன்.

### இராணுவ அலுவலர் பணம் கேட்டார்

19ந் தேதி இராணுவ அலுவலர் ஒருவர் எனது கடைக்கு சாதாரண உடையில் வந்தார். என்னிடம் 50 ரூபா பணம் கேட்டார். அவருடையபெயர் என்னவென்பது எனக்குத் தெரியாது. அவரை சிறி என்று தான் அழைப்பார்கள். இப்பொழுது அவர் இராணுவத்திலிருந்து விலக்கப்பட்டுவிட்டதாகக் கேள்விப்பட்டேன்.

'நான் அவர் கேட்டதைக் கொடுக்கமறுத்தேன். அவர் என்னிடம், எவ்வளவு என்றாலும் தரும்படி வலியுறுத்தினர். நான் 30 ரூபா கொடுத்தேன். அதனைப் பெற்றுக்கொண்ட அவர் அதுகுறித்து யாரிடமும் பேசினல் தொல்லை ஏற்படும் என்றார். பின்னர் முஸ்லிம் கடையொன்றுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டுபணம்கொடுக்காமல் தகராறு செய்ததில், பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாகவும் கேள்விப்பட்டேன்.

### 20-ம் திகதி

ஆகஸ்ட் 20ந் திகதி மாலை 3-15 மணிக்கு இரு இராணுவ வீரர்கள் சாதாரண உடையில் வந்து மாலை 5 மணிவரை பயமின்றி வியாபாரம்செய்யுங்கள் என்றனர். பின்னர் 15 நிமிடம் கழித்துவந்து கடையிலுள்ளவர்களை வெளியேற்றி கடையை மூடும்படி கூறினர். இது எனக்கு உதவுவதுபோல் முதலில் தெரிந்தது. இதன் பின் சார்ஜன்ட்மேஜர் ஒருவரும், முன்பு வந்தவர்களில்ஒருவரும் வந்து கடையிலிருந்த சகலரையும் வெளியேற்றும்படியும் இல்லாவிடில் வீண் தொந்தரவு வருமென்றும் சொன்னர்கள். இது பயமுறுத்துவதுபோலிருந்தது. கடையின் பின்கதவால் நாங்கள் அனைவரும் வெளியேறினேம். அப்போது மாலை 4-15 மணியிருக்கும். எனதுகடைக்கு முன்வீதியில் சுழல்துப்பாக்கிகள் சகிதம் இரு பொலிசார் கடமையிலீடுபட்டிருந்தனர்.

இராணுவத்தினர் சாதாரண உடையில் அங்குமிங்கும் சென்று கொண்டிருந்ததைக் கண்டேன். இராணுவத்தினர் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கவில்லை. வீதியில் சன நடமாட்டமிருந்தது. எனது கடைக்குவந்த அதேஇராணுவ வீரர்கள் முத்துச்சாமிஸ்டோர் லங்கா ஸ்டோர் ஆகிய கடைகளையும் தாக்கி உடைத்துப் பொருட்களை அள்ளி வீதியில் வீசினர். (க-அ)

## கிராமப்புற...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதாகவும், திருநாவுக்கரசு நாயனர் மடாலய தர்மகர்த்தா சபையினர் அரங்கு கட்டும் வேலையை ஆரம்பித்திருப்பதாகவும், பழைய மாணவர் பாடசாலை மதில் கட்டுவதற்கு ஒழுங்கு செய்துவருவதாகவும் கூறினர்.

மாணிக்கவாசகர் இல்லம் முதலாம் இடத்தையும், சமபுள்ளிகள் எடுத்ததால் சுந்தரர் சம்பந்தர் இல்லங்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றன. திருமதி சிவபாதம் பரிசில்களை வழங்கினர். (க-உ)

## தென்மராட்சி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் திரு. சி விஞசித்தம்பிக்கு சாவகச்சேரியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தமது ஆசியுரையில் குறிப்பிட்டுள்ளார்.

விழா மேடையில் பண்டிதமணியின் ஆசியுரைவாசிக்கப்புட்டது பிரம்மஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். ஜெயந்திநகர் ஸ்ரீமத்வடிவேல் சுவாமிகள் அவருக்குப் பொன்னடை போர்த்தினர். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர்கள். நீதவான் திரு. க. ஞானச்சந்திரன் வாழ்த்துப்பா வழங்கினர். இசைக் கச்சேரியும் இடம்பெற்றது.

திரு. சி. விஞசித்தம்பி பதிலுரை நிகழ்த்துகையில், 'ஒவ்வொருவருள்ளும் இறைவன் இருந்தே வருகிறன். மனச்சாட்சி என்ற முறையில் இறைவனின் வழிநடத்துகையைமீறி நாம் தவறு புரிவதனலேயே சகல இடைஞ்சல்களும் தோன்றுகின்றன' என்றார்.

விழாமுடிவில் நீதவான் க. ஞானச்சநதிரன் தலைமையில் திரு. விஞசித்தம்பி ஊர்வலமாக அவரது இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (ச)

## சிறையில் தொங்கிய றிமாண்ட் கைதி!

(காலி)

காலி சிறைச்சாலையில் றிமாண்ட் கைதி ஒருவர் சிறைச்சாலையிலேயே கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கிய நிலையில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

மாத்தறையைச் சேர்ந்த எச். பி. எட்வின் என்பவரே இவ்வாறு மரணமானர்.

காலி மாஜிஸ்திரேட் திரு. மகேந்திரா எக்கநாயக்கா சடலத்தை நேரில் பார்வையிட்ட பின் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். காலி பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். (இ)

### ஆசிரியர் நியமனம்

## ஜி. சி. ஈ. (உயர்தரம்) சித்திபெற்றிருக்க வேண்டும்

(கொழும்பு)

அடுத்தவருடத்திலிருந்து ஆசிரியர் நியமனங்கள், பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்படாத ஜி. ஸீ. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கே வழங்கப்படும்.

இத்தகவலை கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தின நேற்றுமுன்தினம் கல்வி அமைச்சில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். கல்வி அமைச்சர் மேலும் கூறியதாவது;-

"ஆசிரியர் நியமனங்கள் யாவும் வேலைவங்கிக்குப் புறம்பாகவே வழங்கப்படும். வருடாந்தம் 6000 ரூபாவிற்கு குறைந்த தொழில்கள் அரசாங்கம் புதிதாகச்செயல்படுத்தும் வேலைவங்கி மூலமே வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் கல்வி அமைச்சின் விசேடவேண்டுகோளின் பேரில் ஆசிரிய நியமனங்கள் அமைச்சின் மூலமே வழங்கப்படும். கல்விப்போதனைக்கு திறமை உள்ளவர்களைத் தெரிவுசெய்து நியமிப்பதற்கே அமைச்சு இத்திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளது.

"இதுதவிர தற்பொழுது பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாட்டினை நிவர்த்திசெய்வதற்காகப் பாடசாலைகளில் இருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் ஆசிரியர்கள் படிப்பிக்கின்ற பாடத்தினையும் கணிப்பிட்டு, மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களை ஆசிரியர்கள் பற்றக்குறையாக இருக்கும் பாடசாலைகளுக்கு மாற்றப்படும். தற்போது இதற்கான கணிப்பீட்டினை அமைச்சு செய்துவருகிறது. அடுத்தபாடசாலைத்தவணை ஆரம்பத்திற்கு முன் மேலதிகமாகஉள்ள ஆசிரியர்கள் மாற்றப்படுவர்.

மாவட்ட வித்தியாதிபதியின் அனுமதியின்றி மாவட்டத்தில் ஒரு மகாவித்தியாலயத்திலிருந்து மற்றொரு மகாவித்தியாலயத்துக்கு மாணவர்கள் மாற்றம் பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். (சு)

## மேயர்...

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

போது, வான் சாரதியாராக இருந்தார்.

### எனக்குச் சந்தேகம்

சாட்: அன்று வானைச் செலுத்தியவர் வழக்கமான சாரதி இல்லை. வானில் 5,6 பேர் இருந்தனர். அதிலிருந்த ஒருவர் (துரையப்பா) ஐயாவின் மணிக்கூட்டைக் சுழற்ற முயற்சித்தார். அப்போது எனக்கு ஒருவித சந்தேகம் ஏற்பட்டது. 'வான்' புறப்பட்டுச் சென்றபோது, அந்த 'வானை' வழக்கமாகச் செலுத்தும் சாரதி வெளியே நின்றுகொண்டு கையைக் காட்டிக்கொண்டிருந்தார். அப்போதும் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

சட்; கலாபதியை உமக்கு எவரும் சொல்லித்தந்தனரா?

சாட்சி: இல்லை.

சட்: பஸ்தியாம் பிள்ளை சொல்லிக்கொடுத்தாரா?

சாட்சி: இல்லை.

சட்: நீர் வழக்கமாககோவிலுக்குப் போவதுண்டா?

சாட்சி: இல்லை

சட்டத்தரணி வ. ந. நவரத்தினம்: அதுதான் நீர் நிறையப் பொய்சொல்கிறீர். (ம)

### கிளிநொச்சி பலாத்கார வழக்கு:

## தயாவதி நீதிமன்றம் வராததினல் எதிரிகள் இருவரும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

20 வயது இளம்பெண்ணைப் பலாத்காரம் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட வழக்கில் முறைப்பாட்டுச்காரரான தயாவதி நீதிமன்றத்திற்கு வராததினல், எதிரிகள் இருவரும் விடுதலைசெய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் கிளிநொச்சியில் 1974ம் ஆண்டு ஜூன் 2ம் தேதி கிளிநொச்சியில் 20 வயதான இளம்பெண் தயாவதியைப் பலாத்காரம் செய்ததாக எஸ். செல்வராசா கே. திருநாமம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானர் அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் ஆஜரானர்.

இவ்வழக்கில் முறைப்பாட்டுக்காரரான தயாவதியும் சாட்சியான மகேந்திரனும் 74ம் ஆண்டுமுதல் பலதடவை நீதிமன்றத்திற்கு வராததினல் இவ்வழக்குப் பின்போடப்பட்டு வந்தது.

நேற்று சார்ஜன்ட் ரணசிங்கா கன்ஸ்டபிள்களான பண்டா, சில்வா ஆகியோர் அழைக்கப்பட்டபோது முறைப்பாட்டுக்காரரான தயாவதியையும் சாட்சியான மகேந்திரனையும் எங்கு தேடிப் பார்த்தும் காணவில்லை என்று தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து நீதிமன்ற அனுமதியுடன் அரச சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார், இரு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற்றுக்கொண்டார். நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார். (க-அ)

## காலியில் சுருட்டுக் கடை கொள்ளை

(காலி)

காலியில் சுருட்டுக்கடை ஒன்று கொள்ளையடிக்கப்பட்டது.

சனியன்று இரவு கடைக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் இக்கடையிலிருந்து சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான சுருட்டுகளையும் 1652 ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

திரு. எஸ். தர்மலிங்கம் என்பவருக்குச் சொந்தமான இக்கடையில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாக காலிப் பொலிசார் விசாரணைசெய்து வருகிறர். (இ)

### "சாதாரண பங்காளர்"

அண்மையில் சமாதான நீதவாளுக யாழ். நீதவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட திரு. கே. பேரம்பலம், யாழ்ப்பாணம் சாந்தி தியேட்டரின் உரிமையாளர்களான சாந்தி பிலிம்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தில் சாதாரண பங்காளர் மாத்திரமேயாகும் என ஸ்தாபன செயலாளர் திரு. சி. நவரத்தினம் அறிவித்துள்ளார். (க-அ)

### வருடாந்த மகோற்சவம்

சுருவில் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனர் கோவில் மகோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள்வரை நடைபெறும். (ச)

## 240 சிங்கள...

(1-ம் பக்கத் தொடர்சி)

தெரிவித்துள்ளது.

பாடசாலைகளின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் சிங்களப்பாடசாலைகளில் தமிழும் தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களமும் கற்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்ன தெரிவித்துள்ளார். (இ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்-கிழக்கு கந்தர்மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தீர்த்தோற்சவம் இன்றாகும்.

காலை பத்து மணிக்கு சங்காபிஷேகமும் தீர்த்தோற்சவமும் நடைபெறும்,

நாவலம்பதி காட்டுமலைக் கந்தன் தீர்த்தோற்சவம்இன்று காலை 9 மணிக்கு நடைபெறுகிறது. கடந்த 25 தினங்களாக திருவிழா தொடர்ந்து நடைபெற்று இன்றுடன் முடிவடையும். வல்லை ஆற்றில் தீர்த்தமாடல் இடம்பெறும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Te'egram Ealanaadu-Telephone: 389 - Registered as a News paper in :ri Lanka.